1971 டிசம்பர் 14]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிற்சாலைகளில் தொழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகிகளும் சேர்ந்த முடிவுக்கு வந்த ஒப்பந்தங்களை முறைப்படி பின்பற்றினால்தான் ஒப்பந்தங்களுக்கு மரியாதையும், நல்ல விளைவும் ஏற்படும். பாரத் ஹெவி எலெக்ட்ரிகல் கம்பெனி தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் அதிகமாக அட்வான்சாகத் தரப்பட வேண்டுமென்று தொழிற்சங்கத்தால் கேட்கப்பட்டது. அப்படி அட்வான்சாகத் தரப்பட்ட தொகையை இப்போது பிடித்துக் கொள்ளுகிறார்கள். எனவே அதை போனசாகக் கருத இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று வாக்குறுதி கொடுத்த பின்னர் ஒரு குறிப்பிட்ட சங்கத்தைச் சேர்ந்த 23 தொழிலாளர்களுக்கு சார்ஜ் ஷீட், வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற காரணத்தைக் காட்டி, கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்த அரசு, தொழிலாளர்கள் தவறு செய்து, அதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தவர்கள் மீது பின்னர் முதலாளிகள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் கூட இறுதியாக நடவடிக்கையைக் கைவிடுமாறு சொல்லி வருகிறோம். அந்த வகையில் பெரும்பாலும் நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு வருகிறது. இத் தொழிலாளர் நிலை பற்றியும் அரசு பரிசிலனை செய்யும்.

Prosperity Brigade

* 357 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any official of the Central Government visited this State to study the Prosperity Brigade and its work about the 5th August 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) தமிழகத்தில் இயங்கிவரும் சீரணித் திட்டத்தைப் பற்றியும் அதன் செயல் முறைகளைப் பற்றியும் நேரில் பார்த்து தெரிந்துகொள்ள மத்திய அரசிலிருந்து பொதுநலத் தொடர்பு இயக்குநர் டாக்டர், பால் சௌத்ரி அவர்கள் 4—8—1971 அன்று சென்னைக்கு வருகை தந்தார்.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னைக்கு வந்த மத்திய அதிகாரியை மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அழைத்துச் சென்று சீரணி மூலமாகத் தமிழகம் எங்கும் செய்யப்பட்ட வேலைகளைக் காட்டி தமிழகத்தில் சீரணி வேலைகள் எந்த

அளவுக்குச் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை மத்திய அரசுக்கு உணர்த்தி மத்திய அரசு இதற்கு அதிகமாக நிதியை ஒதுக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சிரணித் தனி அதிகாரி, சென்னை மாவட்ட சிரணிச் செயலாளர் ஆகியோர் மத்திய அரசு பொதுநலத் தொடர்பு இயக்குநர் அவர்களை அழைத்துச் சென்று சென்னையில் சிரணித் தொண்டர்கள் 180 தீப் பிடிக்காத வீடுகளைக் கட்டியிருப்பதையும், சிரணி அரங்கத்தையும், ஆயிரம் விளக்குப் பகுதியில் செய்த துப்புரவுப் பணியையும் காட்டியிருக்கிறார்கள். கிராமப்புறப் பகுதிகளில் சிரணித் தொண்டர்களின் பணியை அறியும் வகையில் சென்ட் தாமஸ் மவுண்ட் ஊராட்சி ஒன்றியத் தின் பகுதிகளில் சிரணித் தொண்டர்கள் செய்த பணிகளைக் காண்பதற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிரணித் திட்டத்தைப் பாராட்டி தன் கருத்தைப் பார்வையாளர்கள் புத்தகத்தில் அந்த அதிகாரி எழுதியிருக்கிறார். அதன் பின்னர் செயலாளர், துணைச் செயலாளர், சிரணித் தனி அதிகாரி ஆகியோரிடம் சிரணித் திட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் பெற்று இந்தச் சிரணித் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கும் பரிந்துரைப் பதாகக் கூறிச் சென்றார் டாக்டர் பால் சௌத்ரி அவர்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : நாட்டின் நெருக்கடி நிலையை முன்னிட்டு தமிழகம் பூராவும் சிரணித் தொண்டர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பற்றி ஏற்கனவே பதில் கூறப்பட்டிருக்கிறது. அவசியமானால் இந்த அரசு இதைப் பற்றிப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, now the prosperity brigade work is going on. The Panchayat Union Councils or the public will have to pay two-thirds of the contribution. Now so many works are pending because the contribution from the Panchayat Union Council or from the public is not forthcoming. Will the Government consider and introduce 50/50 per cent contribution from the prosperity brigade side or from the Panchayat Union Council side or from the public side?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்தை நிதிநிலையில் வசதி ஏற்பட்ட பிறகு பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : இந்த ஆண்டு சிரணித் திட்டத் தின்கீழ் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்க இயலும்.

1971 டிசம்பர் 14]

திரு. ரா. ரா. முனுசாமி: மத்திய அதிகாரி அவர்கள் தமிழகத்திற்கு வந்து சென்னையைப் பொறுத்தமட்டில் சீரணியின் பணிகளை அறியும் வகையில் சுற்றிப் பார்த்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கு நடைபெற்ற வேலைகளைப் பாராட்டிச் சொன்னதோடு கூட, இந்த மாதிரி தமிழகத்தில் அதிக வேலைகள் நடைபெற இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதிக மான நிதியை மத்திய அரசிலிருந்து பெறுவதற்கு நம்முடைய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நிதியை ஒதுக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவர்களே இதற்குத் தாமதம் காட்டும் போது அங்கிருந்து வந்த தனி அதிகாரியிடத்தில் நிதியைக் கேட்பது முறையாகாது. சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி இருக்கிறோம்; தொடர்ந்து சொல்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Repatriates.

* 358. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether a number of new concessions have been granted to repatriates from Ceylon and Burma about August 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) 1971, ஆகஸ்டு திங்கள் அளவில், புதிய சலுகைகள் எவையும் வழங்கப்படவில்லை. எனினும், வீட்டு மனைகள் வாங்குவதற்குரிய விற்பனைப் பத்திரங்களுக்கு முத்திரைத்தாள் தீர்வைச் செலுத்தப் படுவதிலிருந்து அரசு விலக்கு அளித்துள்ளது. இத்துடன், வர்த்தகக் கடன்களையும் வீட்டு வசதிக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவையும் நீட்டித்துள்ளது.

திரு. எம் சுரேந்திரன்: இதுபோன்று இலங்கையிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் வருகிற அகதிகளுக்கு அதிகபட்சமாக எவ்வளவு தொகை உதவியாகத் தரப்படுகிறது? அதல்லாமல் கடனாகவும் தரப்படுகிறதா என்பதையும், அறிய விரும்புகிறேன். முற் பகல் 9–30

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதற்குரிய முன் தகவல் இல்லை. கேள்வி இந்த ஆண்டு இந்த மாதம் என்ன சலுகைகள் தரப்பட்டன என்பதுதான். என்னென்ன சலுகைகள் இந்த அகதிகளுக்குத் தரப்படுகின்றன என்றளவில் கேள்வி போட்டால் முழு விவரங்களும் அளிக்க முடியும்.

* 359. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

1971 செப்டம்பர் மாதம் முடிய இலங்கையிலிருந்து தமிழகத் திற்கு வந்து சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?